


# மனை உட்பிரிவு

## மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்

தென்காசி மாவட்டம்,
சங்கரன்கோவில் வட்டம்,
களப்பாகுளம் ஊராட்சி,
களப்பாகுளம் கிராமம்,
சர்வே எண்கள் –38/2B2 - இல் அமையும் மனை உட்பிரிவின் சாலையமைப்பு வரைபடம்.

அளவு: 1:500 இணையதள விண்ணப்ப எண்: 0QKHMCSC

**குறிப்பு** :-

மனைப்பிரிவு இடத்தின் பரப்பு – 876.00ச.மீ (0.216 ஏக்கர்)
கோரிய மனைகள் - 05
ஒதுக்கிய மனைகள் - 04 மற்றும் மனுதாரர் உபயோக கிணறு மனை.
மனைப்பிரிவு இடத்தின் எல்லை
நிலையிலுள்ள சாலை

**பொது ஒதுக்கீடுகள்** :-

TNCDBR -2019 விதி47(6)-ன் படி OSR 10 % பரப்பிற்கு ஈடான அரசு வழிகாட்டி மதிப்பீட்டுத் தொகையினை மனுதாரர் உரிய அரசு கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

**நிபந்தனைகள்** :-

1. அரசாணை நிலை எண் : 71 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை நாள் 16.08.2003 -ன் படி நில உரிமம் குறித்து உள்ளாட்சி நிர்வாகம் உறுதி செய்துகொள்ள வேண்டும்.
2. இம்மனை உட்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கும்முன் நில ஆர்ஜிதம் ஏதும் இல்லை எனவும், எந்தத் துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும், நில ஆர்ஜிதம் செய்து தரக்கோரி மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து உத்தேசங்கள் ஏதும் பெறப்படவில்லை எனவும், தலைவர்,களப்பாகுளம் ஊராட்சி அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
3. நில உரிமம் குறித்து சமர்பிக்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது இம்மனை உட்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின், இம்மனை உட்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன் அறிவிப்பும் இன்றி ரத்து செய்யப்படும்.
4. அரசாணை நிலை எண் : 181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் 9-12-2020-ன் படி தலைவர், களப்பாகுளம் ஊராட்சி அவர்கள் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளபட வேண்டும்.
5. மனை உட்பிரிவில் அமைந்துள்ள கிணறு மனையினை சுற்றி தடுப்பு சுவர் எழுப்பியும், கம்பிவலை தடுப்பு அமைத்தும் எவ்வித அசம்பாவிதங்களும் ஏற்படாதவாறு மனுதாரரால் பராமரிக்கப்பட வேண்டும்.

ம.வ/தெமாநஊ அ எண் :SWP/ 29 /2024

Validity unknown

Signed by: Assistant Director
Location: Tenkasi
Date:2024.08.27 16:52:03

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
தென்காசி மாவட்டம்

ஒப்புதல் அளிக்கப்பட்டது.
V. Siva 06/9/24
தலைவர்
ஊராட்சி மன்றம்
களப்பாகுளம்

களப்பாகுளம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

முன்னிலை

திருமதி. வே. சிவசங்கரி

ந.க.எண்: 2 நாள்: 6/9/24

பொருள்: குடியிருப்பு மனைப்பிரிவு - தென்காசி மாவட்டம் - சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியம் - களப்பாகுளம் ஊராட்சி - 38/2B2-ல் குடியிருப்பு மனைப்பிரிவு திட்ட அனுமதி மற்றும் D.T.C.P தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டது தொடர்பாக.

பார்வை:
1. அரசு ஆணை (நிலை) எண்: 71, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை நாள்: 16.08.2003
2. அரசு ஆணை (நிலை) எண்: 255, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை நாள்: 16.08.2003
3. இணை இயக்குநர் / உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அவர்களின் அலுவலக கடித ந.க.எண்: 0QKHMCSC/2024/TCP

உத்தரவு:

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியம், களப்பாகுளம் ஊராட்சி சர்வே எண்: 38/2B2-ல் 876 ச.மீட்டர் பரப்பளவில் அமையவுள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இணை இயக்குநர் / உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் தென்காசி மனை பிரிவு எண் மா.வ/தெ.மா.நா.ஊ.அ.எண்: SWP/29/2024 என்ற எண்ணில் கீழ்கண்ட நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இம்மனைபிரிவு 876.00 சதுரமீட்டர் பரப்பில் அமைந்துள்ளது. இதில் 4 மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இம்மனைபிரிவிற்கு கீழ்கண்ட விவரபடி, மனைபிரிவு, உரிமையாளரால், கட்டணங்கள் செலுத்தபட்டு உள்ளது. மொத்த சதுர மீட்டர் 876-க்கு Rs.4000/- (4மனைகள்) ஊராட்சி நிதியில் இந்தியன் வங்கி கிளை களப்பாகுளம்
V.P. 230823 கணக்கு எண்: 7388531417 நாள். 31.08.2024 படி செலுத்தப்பட்டுள்ளது.

| மனை எண் | மனை அளவு சதுர மீட்டர் | ஊராட்சிக்கு செலுத்தப்பட்ட வளர்ச்சி கட்டணம் |
|---|---|---|
| 38/2B2 | 876 | 4 X 1000 = 4000 |

எனவே பின்வரும் நிபந்தனைகளுடன் இக்குடியிருப்பு மனைவபிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

1. இணை இயக்குநர் / உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அவர்களின் அலுவலக கடித மா.வ.தெ.மா.நா.ஊ.அ.எண்: SWP29/2024 நாள்: 30.08.2024 படி குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளை பின்பற்றப்பட வேண்டும்.

2. மனைபிரிவுக்கு கட்டணம் செலுத்தியதில் வித்தியாச தொகை ஏதேனும் செலுத்த வேண்டியது பின்னர் அறியப்பட்டால் அதனை செலுத்த வேண்டும்.

3. நீதிமன்ற வழக்கு வேறு ஏதேனும் வில்லங்கம் இருப்பின் மனுதாரரை சார்ந்ததாகும்.

4. ஓடை தண்ணீர் மனைக்குள் பாயும் பட்சத்தில் அதனை அகற்றும் பொறுப்பு சம்பந்தப்பட்ட மனுதாரரை சாரும். உள்ளாட்சி பொறுப்பு அல்ல எனவும் தெரிவிக்கப்படுகிறது.

V. Siva [signature] 06/9/24

தலைவர்
ஊராட்சி மன்றம்
களப்பாகுளம்